செ.வெ.எண்: 14/ 2019 நாள்: 10.09.2019

**பத்திரிக்கைச் செய்தி**

**திருப்பூர் மாவட்டத்தில் பொது விநியோகத் திட்ட சிறப்பு குறைதீர்க்கும் நாள் முகாம் 14.09.2019-ல் நடைபெற உள்ளது.**

திருப்பூர் மாவட்டத்தில் பொது விநியோகத்திட்ட சிறப்பு குறைதீர்க்கும் நாள் முகாம் எதிர்வரும் **14.09.2019** (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை அனைத்து வட்டங்களிலும் உள்ள கீழ்க்கண்ட கிராமங்களில் நடைபெற உள்ளது. இக்குறைதீர்க்கும் நாள் முகாமில் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து குடிமைப்பொருள் தனி வட்டாட்சியர்கள், வட்ட வழங்கல் அலுவலர்கள் மற்றும் தனி வருவாய் ஆய்வாளர்கள் கலந்து கொண்டு முகாமில் பெறப்படும் மனுக்களுக்கு உடனடி தீர்வு செய்ய உள்ளார்கள்.

| வ. எண். | வட்டம் | கிராமம் | நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1. | அவினாசி | வேட்டுவபாளையம் | அ.குறும்பபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் |
| 2. | திருப்பூர் வடக்கு | வேலம்பாளையம் | தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் |
| 3. | திருப்பூர் தெற்கு | அவினாசிபாளையம் | வேலம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் |
| 4. | ஊத்துக்குளி | ஊத்துக்குளி | தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் |
| 5. | பல்லடம் | சுக்கம்பாளையம் | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், இ-சேவை மையம் |
| 6. | உடுமலைப்பேட்டை | செல்லப்பம்பாளையம் | தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் |
| 7. | மடத்துக்குளம் | கொமரலிங்கம் | தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் |
| 8. | தாராபுரம் | சின்னியகவுண்டம்பாளையம் | தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் |
| 9. | காங்கேயம் | கீரனூர் | மரவபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் |

மேற்படி முகாமில் கிராம பொதுமக்கள் புதிய மின்னணு குடும்ப அட்டைகளுக்கான மனுக்களை வழங்கவும், மின்னணு குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல் நீக்கல், பெயர் திருத்தம் போன்ற மின்னணு குடும்ப அட்டை தொடர்பான கோரிக்கைகளை நிவர்த்தி செய்து கொள்ளவும் இவ்வாய்ப்பினை தவறாது பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**